**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **44**

| | | | |
|---|---|---|---|
| Name: | அப்துல்மஜீத் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A11, A17, A18,A19 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**22.02.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் நடுப்பேட்டை தெருவில் குடியிருந்து தற்போது மவுண்டரோட்டில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் காஜா ஸ்டோர் என்ற பெயரில் பெயிண்ட் கடை நடத்தி வந்தேன். எங்கள் ஊரில் மசூதி கட்டுவது தொடர்பாக இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. செய்தித்தாளில் விபரங்களை படித்துள்ளேன். யார் இறந்தார்கள் யார் ஒருவரை மற்றொருவர்கள் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் வழக்கமாக கடையை காலை 09.00 மணிக்கு திறந்து இரவு 09.00 மணிக்கு அடைப்போம். கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் வழக்கம் போல் நான் கடையை

திறந்து இருந்தபோது வெளியே சப்தம் கேட்டது. எல்லோரும் கடையை அடைத்துவிடுங்கள் என சப்தம் போட்டார்கள். நானும் கடையை அடைத்து விட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் வெளியே சப்தம் கேட்ட சம்பவம் என்ன வென்று நான் பார்க்கவில்லை. இஸ்லாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே பிரச்சனை என்று தொலைகாட்சி மூலம் தெரிந்து கொண்டேன். யார் யாருக்கு இடையே சண்டை நடந்தது என்று நான் கேட்கவில்லை. நான் தெற்கு நோக்கி சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**